

Song 5 கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்

Psalm 40 (I waited patiently for the Lord; He inclined to me and heard my cry; He drew me up from the pit of destruction, out of the miry bog, and set my feet upon a rock)

கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளும் ஐயா

பயங்கரமனே குழியிலிருந்தும்
உளையான சேற்றிலுமிருந்தும்
என்னை தூக்கியெடுத்து உறுதிப்படுத்தி
என் கால்களை கன்மலையின் மேல் நிறுத்தும்

கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளும் ஐயா

தேவனை துதிப்பதற்கும்
அவரையேஆராதிப்பதற்கும்
எந்தன் நாவில் புதுப்பாட்டைக் கொடுத்து
மகா சபையிலே என்னை பாட நிறுத்தும்

கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளும் ஐயா

எந்தன் பலிகளையும்
நான் படைக்கும் காணிக்கையையும்
நீர் விரும்பாமல், என் செவிகளை திறந்து
உம் வேதத்தை என் உள்ளத்தில் நிறுத்தும்

கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளும் ஐயா

உம் நீதியை பிரசங்கிப்பதற்கும்
உம் மகிமையை சொல்வதற்கும்
என் இருதயத்தில் உம் கிருபை தந்து
பிரியமானதைச் செய்யச் சொல்லும்

கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளும் ஐயா

KJO DNN

எந்தன் தாழ்மையைப் பாரும்
எந்தன் எளிமையைப் பாரும்
கர்த்தர் என்மேல் நினைவாய் இருந்து
சீக்கிரமாய் விடுவித்து எடுத்துக்கொள்ளும்

கர்த்தருக்காக பொறுமையாக என்றென்றும் காத்திருப்பேன்
என்னிடமாக சாய்ந்து எந்தன் ஜெபத்தைக் கேளும் ஐயா

KJC-DNN

